பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அதி உயர்ந்த
தரத்திற்கும்
உத்தரவாதத்திற்கும்
வாங்குங்கள்
சிக்மா பம்ப்ஸ்

# உதயன்

விலை ரூ 2.

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

For Quality &
Durability
Buy the very Best
IN PUMPS
Buy
Ceygma Pumps

கடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடு புரட்டாதி மீ 20 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 24 (06 - 10 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 202

# அரச நாடாளுமன்றக் குழு அவசரமாகக் கூடுகிறது

## வடக்கு, கிழக்கு மாகாணசபை தேர்தல் குறித்து நாளை ஆராயும்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு. அக்டோபர் 6

வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்தும் பிற விடயங்கள் குறித்தும் ஆராய்வதற்காக அரச நாடாளுமன்றக் குழு நாளை அவசரமாகக் கூடுகிறது.

மாகாண சபைத்தேர்தல் வடக்கு, கிழக்கில் மூடப்பட்டுள்ள செயலகங்கள், தெற்கில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்கள் ஆகியவை குறித்தும் அரச நாடாளுமன்றக் குழு விரிவாக ஆராயும்.

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் இந்தக்கூட்டம் நடைபெறும்.

புனர்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. லயனல் ஜெயத்திலகாவின் கொலையை அடுத்து இந்தக் கூட்டம் கூட்டப்படுவதால் ஜனாதிபதி, பிரதமர் அமைச்சர்கள் மற்றும் எம். பி,க்களின் பாதுகாப்புக் குறித்து இந்தக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படலாம் என்றும் தெரியவருகிறது.

மாகாணசபைத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதை அடுத்து வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் எழுந்துள்ள அதிருப்தி நிலை -

இதனால் உத்தேசதேர்தலின் போது ஆளும் கட்சிக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு ஆகியவை பற்றியும் அரச நாடாளுமன்றக் குழு ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டது

நாளை நடைபெறவிருக்கும் இந்தச்கூட்டத்தை அடுத்து அரசாங்கம் முக்கிய முடிவுகளை அறிவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது

(உ-ஓ-ஐ)

## பிரேமாவுக்கு சிறிமா பகிரங்க சவால்!

கொழும்பு, அக். 6

திரு. பிரேமதாஸ தனது பிரதமர் பதவி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ஆகியவற்றை ராஜினாமாச் செய்துவிட்டு என்னுடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வருவாரா?

சுதந்திரக் கட்சிக் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஹறிஸ்பத்துவ, கலகெதர ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்துகொண்டு பேசியபோது இப்படி பகிரங்க சவால் விடுத்தார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது:-

நான் ஒரு சாதாரண பிரசையாக - சிறிமா பண்டாரநாயக்கா ஆகத் தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன். ஆகவே பிரதமரும் தனது பதவிகளைத் துறந்துவிட்டு சாதாரண பிரசையாக என்னை எதிர்த்துப் போட்டியிட முன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

எமது கோரிக்கைகள் ஏற்கப்படாவிடில்

# தமிழ் மக்கள் தம் தலைவிதியை தாமே நிர்ணயிக்க விடுங்கள்!

## தீருவிலில் தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் உரை

வடமராட்சி, அக் 6

தமிழ் ஈழம் மக்கள் மன்றம் நான்கு கோரிக்கைகளை இந்திய அரசின் முன் வைத்திருக்கிறது

அந்தக் கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்கத் தவறும்பட்சத்தில் - தமிழ் ஈழ மக்களைத் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்க விட்டு விட்டு எமது தாயகத்திலிருந்து தனது படைகளை இந்தியா மீளப் பெற்றுக் கொள்ள வேண்டுமென இந்திய அரசைக் கோருவது என தமிழ் ஈழம் மக்கள் மன்றம் மனவருத்தத்துடன் தீர்மானிக்கிறது

-இவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நேற்று தமிழ் ஈழம் மக்கள் மன்றம் பகிரங்கமாக அறிவித்தது

தமிழ் ஈழம் மக்கள் மன்றத்தின் தலைவர் திரு சே. சிவானந்த சுந்தரம் இதனை நேற்று தீருவிலில நடைபெற்ற தியாகிகள் நினைவுத் தூபி திறப்பு விழாவில் வைத்து அறிவித்தார்.

தமிழ் ஈழம் மக்கள் மன்றம் முன்வைத்திருக்கும் நான்கு கோரிக்கைகள் வருமாறு:-

★ வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு நடத்தப்படவிருக்கும் தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக இரத்துச் செய்வதற்கும்-

★ மாகாணசபை அமைப்பை பற்றியும் அதற்கானமேலதிக அதிகாரம் பற்றியும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தி ஓர் அரசியல் தீர்வு காண்பதற்கும்-

★ அவ்விதம் ஒரு தீர்வு ஏற்படும் வரை எமது பிரதேசத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## துக்கதினம் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பணம், அக் 6

யாழ்நகர் உட்பட குடாநாட்டின் பலபாகங்களும் நேற்று வெறிச் சோடிக் காணப்பட்டன

கடந்த வருடம் அக்டோபர் 5 ஆம் திகதி வீரமரணம் அடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பன்னிருவருக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாகவே நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

பல பகுதிகளிலும் சடைகள் மூடப்பட்டிருந்தன

போக்குவரத்துச் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

வங்கிகள் இயங்கிய போதும் வாடிக்கையாளர் வரவு குறைவாக காணப்பட்டது. (உ-10

### நகரில் 2 குண்டுகள் வெடித்தன

யழ்ப்பணத்தில் நேற்று இரண்டு கைக் குண்டுகள் வெடித்தன.

இதனால் நகரில் பதற்றம் நிலவியது.

நேற்று மாலை மூன்று மணியளவில் சென்ஜோன்ஸ் கல்லூரிக்குச் சமீபமாக ஒரு குண்டும், செம்படிச்சந்தியில் மற்றொரு குண்டும் வெடித்தன

எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை

(ஓ-10)

### பத்மநாபா இலங்கையில?

கொழும்பு, அக் 6

இந்தியாவில் தங்கியிருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் திரு பத்மநாபா இலங்கை வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய செய்தி வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

வடக்கு, கிழக்குமாகாண சபைத் தேர்தல்களில் தமது இயக்க வேட்பாளர் பட்டியலைச் சமர்ப்பிப்பது தொடர்பான நடவடிக்கைகளுக்காகவே அவர் இலங்கை வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் அவருக்கு எதிரான வழக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புளத்சிங்கள எம். பி. பதவி; சு. க- யு.என்.பி இழுபறி!

கொழும்பு, அக்.6

புளத்சிங்கள தொகுதிக்கு எம்.பி ஒருவரை நியமிக்கும் உரிமை எந்தக் கட்சிக்கு உண்டு?

இது குறித்து பலத்த விவாதம் ஏற்பட்டுள்ளது.

யு. என் பிபுளத்சிங்கள தொகுதிக்கு திரு. ரெனி டி மெல்லை நியமித்தது.

அண்மையில் அவர் யு. என் பியில் இருந்து சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார்.

அதன் பின்னர் புளத்சிங்கள எம் பி பதவியையும் ராஜினாமாச் செய்தார்.

கட்சி மாறிய திரு ரெனி டிமெல் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி நாடாளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் முன்னர் அவர் எம் பி பதவியை ராஜினாமாச் செய்தார்.

சுதந்திரக் கட்சி எம் பி யாக இருந்த பின்னர் ராஜினாமாச் செய்தால், புளத்சிங்கள தொகுதிக்கு புதிய ஒருவரை எம். பியாக நியமிக்கும் உரிமை சுதந்திரக் கட்சிக்கு உண்டு என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

இது பற்றி தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா பரிசிலனை செய்து வருகிறார்.

(உ-எ)

## இருவர் வெட்டிக் கொலை

### கெருடாவிலில் சம்பவம்

கரவெட்டி, அக் 6

ஊரடங்கு வேளையில் வீடு ஒன்றினுள் புகுந்த இனந்தெரியாதகோஷ்டி ஒன்று வீட்டில் இருந்த வயோதிபத் தந்தையையும் மகனையும் வெட்டிக் கொன்றது. மற்றும் இருவர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணியளவில் தொண்டமானாறு கெருடாவில் பகுதியில் இடம்பெற்றது.

சுமார் பதினைந்து பேரைக் கொண்ட இனந்தெரியாத கோஷ்டி ஒன்று செல்லக்கண்டு என்பவருடைய வீட்டினுள் புகுந்து அங்குள்ளோரை வெட்டியது.

இச்சம்பவத்தில் வேலுப்பிள்ளை செல்லக்கண்டு (60 வயது) என்

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

6-10-1988
புரட்டாதி 20
வியாழக்கிழமை
சுபநேரம்:
07.32முதல் 09.02வரை
ராகுகாலம்:
1.32 முதல் 3 02 வரை
ஏகாதசி விரதம்

தீருவில் மைதானத்தில் அஞ்சலி :

## பல்லாயிரக்கணக்கானோர் கூடிநிற்க தூபி திறப்புவிழா

வடமராட்சி, அக். 6

12 போராளிகளின் நினைவாக வல்வெட்டித்துறை தீருவிலில் நேற்று இடம்பெற்ற தூபி திறப்பு விழாவில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

யாழ் குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பேரணியாக வந்து கலந்து கொண்டபோது தீருவில் ஜனசமுத்திரமாகக் காட்சிஅளித்தது

வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக்குழுவினராலும், தமிழ் ஈழம் மக்கள் மன்றத்தினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலங்கள் பருத்தித்துறையில் இருந்து சுப்பர்மடம், இன்பருட்டி, திக்கம், பொலிகண்டி ஊடாகவும்—

நெல்லியடி, இமையாணன், தொண்டமானாறு உடுப்பிட்டி ஊடாகவும் வந்து தீருவிலை அடைந்தன.

நண்பகல் 12-00 மணி அளவில் வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் பிரேமச்சந்திரன் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது

ந. ஆனந்தராஜ் ஆசிரியர் ஆரம்ப உரை நிகழ்த்திய பின் வடமராட்சி மாணவர்களால் தமிழ்த் தாய்பாடல் பாடப்பட்டது.

இதன்பின்பு 12போராளிகளின் தூபிகளுக்கும் விளக்கு ஏற்றும் வைபவம் இடம்பெற்றது.

குமரப்பாவின் தூபிக்கு அவரது பெற்றோர்

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஊர்வலம் சென்ற இளைஞர் கைதாகி விடுதலை

வடமராட்சி அக் 6

வல்வெட்டித்துறை திருவில் தூபி திறப்பு விழாவில் கலந்து கொள்ள ஊர்வலயாக சென்ற இளைஞர் ஒருவர் இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் வந்த சுப்பர் மடத்தைச் சேர்ந்த இளைஞரான எஸ். நாகராசா என்பவரை யே தலையாட்டியுடன் நின்ற அமைதிப்படையினர் கைது செய்தார்கள்.

பிரமுகர்களின் வேண்டுகோளை அடுத்து அந்த இளைஞர் விடுவக்கப்பட்டார். (ஓ-16)-70)

### புளொட் பகிஷ்கரிப்பு

கொழும்பு, அக்.6

புளொட் இயக்கமும் வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலை பகிஷ்கரிக்க போவதாக அறிவித்தது

இத்தகவலை பி பி. சி. வானொலி நேற்று இரவு அறிவித்தது.

(உ எ)

## திருமலையில் கடையடைப்பு!

கொழும்பு, அக் 6

திருகோணமலை நகரில் நேற்று முழு அளவில் கடையடைப்பு இடம் பெற்றது

அலுவலகங்கள் மூடப்பட்டன. பாடசாலைகள் இயங்கவில்லை. போக்குவரத்து ஸ்தம்பித்தது

வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 12 பேரின் நினைவாகவே இந்தக் கடையடைப்பு அனுஷ்டிக்கப்பட்டது. (உ-எ)

ஆயுதத்துடன் ஜவான்கள் விடுவிக்கப்பட்டதை அடுத்தாவது

# இந்திய அரசின் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும்

## பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு அறிகை

யாழ்ப்பாணம் அக் 6

முல்லைத்தீவில் வைத்துச் சிறைப் பிடித்த இரு இந்தியஅமைதிப்படை ஜவான்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த சனிக்கிழமை பொதுமக்கள முன்னிலையில வைத்து விடுவித்தனர். இந்த நடவடிக்கை இந்திய அரசின கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

வடக்கு-கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினால் ஜவான்கள் விடுதலை செய்யப்பட்டது இதற்கு முன்பும் நிகழ்ந்துள்ளது. ஆனால் இம்முறை முதல் தடவையாக ஜவான்களைக் கையளிக்கும் போது அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட ஆயுதத்தையும் விடுதலைப் புலிகள் ஒப்படைத்துள்ளனர்.

அத்துடன் ஜவான்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உவற்றை சர்வசன வாக்கெடுப்பாலை நாடு என்ன சீரழிவுக்கு போயிருக்கு பாத்தியளே.. அதுக்குள்ள பெரிசா பீத்திறுர்...!

### கிலீபனின் நினைவுத் தூபி சேதம

யாழ்ப்பாணம், அக் 6

சிறுப்பிட்டியில் ஸ்தாபிக்கப்பட்ட திலீபனின் நினைவுத் தூபி கடந்த சனிக்கிழமை இரவு இனந் தெரியாதோரால் சேதமாக்கப்பட்டது.

இந்த் தூபி கடந்த 23 ஆம் திகதி திறந்து வைககப்பட்டது.

(உ-160-126)

## சர்வசன வாக்கெடுப்பை புகழ்கிறுர் ஜே. ஆர்!

கொழும்பு, அக் 6

இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வசன வாக்கெடுப்பு முறை உலகிலே மிகச்சிறந்த ஜனநாயக நடவடிக்கை என்று இந்திய ஜனதிபதியே பாராட்டியிருக்கிறுர்.

இத்தகவலை ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று பொலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்

அமைச்சரவை செயலகத்தில் இம் மாநாடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

Honda Reconditioned புதிய பழைய Model C. 90. C 70. C 50, CD 90. MD 90. Lancer 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. No. 16. கண்டி வீதி, கண்டிக்குளி. யாழ்ப்பாணம். (A G A.) அலுவலகம் முன்பாக) (6946)

நல்ல இன ஆடுகள், மாடுகள் முட்டையிடும் பருவத்தில் உள்ள நிரக் கோழிகள் இவற்றின் எரு என்பன பிரயாணம் காரணமாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S T. சுரேந்திரபாலன், இல. 27/14 முகாம்ஒழுங்கை, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி. (6950)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பணம். (C 357)

## கோழிக்குஞ்சு

பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய் : சற்குணராஜா அன் பிரதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7067)

பிறவுண் சேவற்குஞ்சுகள் பேட்டுக்குஞ்சுகள் Hyline வெள்ளைப்பேடு. கறுப்புச்சேவல்கள் 7 ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய் - சற்குணராஜா & பிரதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (7071)

## இறைச்சிக் கோழி

புரொயிலர் இறைச்சிக் கோழி. விருந்து சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. மொத்தமாக எடுப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு. சற்குணராசா அன் பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (6786)

தேவை

நகரின் மத்தியிலிருக்கும் சைவ உணவகத்திற்கும் சிறீம் ஹவுஸுக்கும் காசாளர், சிப்பந்திகள், சமையற்காரர்கள் உடன் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இல 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (7070)

## தேவை

பிளேட்டின் மெஷின் மைண்டர் தேவை. நேரில் வரவும். செட்டியார் அச்சகம், கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (C/359)

புறூவ் றீடர் (Proof Reader) தேவை. இருமொழிகளும் தெரிந்து திருத்தல் வேண்டும். முன் அனுபவம் அவசியம். நற்சாட்சிப் பத்திரப் பிரதிகளுடன் 10-10-88 க்கு முன் விண்ணப்பிக்கவும். இல 383. மே/பா உதயன், யாழ்ப்பாணம். (C/360)

## தவறிவிட்டது

சுகந்தி ராஜதுரை ஆகிய எனது அடையாள அட்டை இல. 675761884V 23-9-88 அன்று பருத்தித்துறை பஸ்ஸில் தவறிவிட்டது. இத்துடன் தாதிமார் பயிற்சி அடையாள அட்டையும் உள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6949)

## In Memoriam Leiughtenant M. Jacob

Retired Teacher St. Patrick's College, Jaffna. Ex Mayor of Jaffna Tearful Emotion "Model" in everyway to students and general public Prostrations to almighty god Salutations to you C. Vamadeva, Jaffna (6943)

## Advanced English

புதியபிரிவு ஆரம்பம் 8-10-88 சனி, ஞாயிறு நாட்களில் காலை 8 30 மணி - 10. 30மணி S.B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6863)

கடந்த கால வினாப் பத்திரங்களுடன் பதது மணித்தியால மீட்டல் வகுப்புகள் ஆரம்பம்: 8-10-1988. சனி, ஞாயிறு நாட்களில் பகல் 11-30 மணி — 12 30 மணி வரை. S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6937)

## சுட்டுக் கொலை

மட்டக்களப்பு அக் 6 இனந்தெரியாத நபர்களினால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட வாலிபர் ஒருவர் மறுநாள் பாதை ஓரத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன்சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் கெம்மாதுறையில் நடைபெற்றது.

இறந்தவர் எஸ் தங்கராசா (வயது 24) என அடையாளம் காணப்பட்டது.

சின்ன ஊறணியில் எம் விக்னேஸ்வரன் (வயது 24) என்பவரும் இனம் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரின் சடலம் கால், கைகள் கட்டப்பட்ட நிலையில் ஊறணிச் சந்தியில காணப்பட்டது. (ச-21)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் றெடிமேட் ஆடை தயாரிக்கும் நிலையத்திற்கு தையல் வேலையில் நன்கு தேர்ச்சி பெற்ற பெண் பிள்ளைகளும், அனுபவமுள்ள (ஆண்) விற்பனைப் பிரதிநிதி ஒருவரும் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

திரு. தம்பி,
341 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(6948)

# யாழ்-கொழும்பு



விமான சேவை

6-10-88 இன்று

புறப்படும் விமானத்தில் சில வெற்று ஆசனங்கள் உண்டு.

உடனடியாக தொடர்பு கொள்ளவும்

**Mack Travels (Pvt) Ltd,. JAFFNA.**

(C-100)

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம், கைதடி.

லொறி எஞ்சின் திருத்த வேலைக்கும் உடற்கோப்பு (பொடி) மறுசீரமைத்தல் (மரவேலை) வேலைக்கும்

## கேள்வி விண்ணப்பம்

1. சங்க இசூசு லொறியின் எஞ்சின் திருத்த வேலைகுரிய கூலிக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் ரூபா 25/- செலுத்திப் பெற்றுக்கொள்ளவும் கேள்வியில் சித்தி பெறுபவர் பிணைவைப்பாக ரூபா 500/- செலுத்துதல் வேண்டும்.
விண்ணபபமுடிவு திகதி: 15. 10. 1988.
2. இசூசு லொறியின் உடற்கோப்பு(பொடி) மறுசீரமைத்தலுக்குரிய வேலைகளுக்கு (மரவேலை) பொருட்களுக்கும் கூலிக்குமாக கேள்வி விண்ணப்பம் கோரப்படுகிறது. விண்ணப்பப் படிவம் ரூபா 25 - செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். கேள்வியில் சித்திபெறுபவர் பிணைவைப்பாக ரூபா 2000/- செலுத்துதல் வேண்டும்
விண்ணப்ப முடிவு திகதி:15 10. 1988.

விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவத்திற்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்

ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனி விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும்.

—பொது முகாமையாளர்.

தென்மராட்சி மேற்கு ப நோ. கூ. சங்கம், கைதடி. 04. 10 1988 (C/371)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
பிலோமினம்மா டானியல்
(மறைந்த மக்கள் எழுத்தாளர் கே. டானியலின் மனைவி)

பிறப்பு: 25 5 - 1931 இறப்பு: 6 - 10 - 1986

எமது நல்வாழ்வின் உயர்ச்சிக்காகவும் மறைந்த தந்தை டானியலின் அரசியல், இலக்கிய சமுதாயசேவைப் பணிகளின் உயர்ச்சிக்காகவும் உங்கள் வாழ்நாள்முழுக்க உழைத்து தங்கள் கடமையைச் சரிவரச் செய்த உங்கள் பசுமையான நினைவுகள் என்றும் எம் மனதில் நிலைத்திருக்கின்றன.

—பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"வசந்தம்"
76/2 கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (7245)

# வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள்

## இயங்க முடியாத நிலை

### நஷ்ட ஈடு பெறுவதில் தாமதம்

யாழ்ப்பாணம், அக் 5 வடக்கு- கிழக்குப் பகுதிகளில் மேலதிகமாவட்டப் பதிவாளர்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், அசம்பாவிதங்களின் போது உயிரிழந்தவர்களுக்கு நஷ்டஈடுவழங்குவதற்கான நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படலாம் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அசம்பாவிதங்களின் போது உயிரிழந்தவர்களுக்கு இறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன் மேலதிக மாவட்டப்பதிவாளரிடம் உயிரிழந்தவர்கள் சம்பந்தமாக சகல விவரங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

இந்த விவரங்களை மேலதிக மாவட்டப்பதிவாளர் விரிவாக ஆராய்ந்த பிறகே சம்பந்தப்பட்டவர்களுக்கு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்க பிறப்பு இறப்பு பதிவாளருக்கு அதிகாரம் வழங்குவார்.

தற்போது தமிழ்ப்பகுதிகளிலுள்ள மேலதிக மாவட்டப்பதிவாளர்கள் இயங்க முடியாதிருப்பதால் தேவையான அதிகாரங்களை பிறப்பு இறப்பு அத்தாட்சியாளர்களுக்கு வழங்க முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது

இதனால் அசம்பாவிதங்களின் போது உயிரிழந்தவர்களுக்கென அரசாங்கம் வழங்க முன்வந்திருக்கும் நஷ்ட ஈட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற ஓர் உயர்மாநாட்டில் இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

அசம்பாவிதங்களின் போது உயிரிழந்தவர்களுக்கான இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைத் துரிதமாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அந்த மாநாட்டில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-ஐ-க)

ஜி.சி.ஈ பரீட்சை முடிவு:

## தாமதமாவதற்கு கம்பியூட்டர் காரணமாம்

யாழ்ப்பாணம் அக் 6 ஜி. சி. ஈ. சாதாரண தர ஜூலை விசேஷ பரீட்சையின் பெறு பேறுகள் தாமதமாவதற்குகம்பியூட்டரே காரணமாம்.

வழமையாக பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்பட்டவுடன் அவை கம்பியூட்டரில் பதிவு செய்யப்பட்டு பின்னர் முடிவுகள் அறிவிக்கப்படும்.

ஆனால் இந்த விசேஷ பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்பட்டு முடிந்த வேளை மற்றுமொரு பரீட்சைப் பெறுபேறுகள் கம்பியூட்டரில் செலுத்தப்பட்டிருந்தன என்றும்-

அந்தப்பரீட்சை பெறுபேறுகள் கம்பியூட்டரில் பதிவாகிய பின்னரே விசேஷ பரீட்சைப் பெறுபேறுகள் கம்பியூட்டரில் செலுத்தப்படும்என்றும்-

அதனாலேயே பரீட்சைப் பெறுபேறுகள் தாமதமாவதாகவும் தெரிவிக்கப்பட்டது (இ க)

## சாவகச்சேரியில் கோகுலாலயம்; 21 இல் திறப்பு

சாவகச்சேரி அக் 6 சாவகச்சேரி குமரக் கோட்டம் முருகன் ஆலயத்தில் கோகுலாலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் மதரீதியான திறப்புவிழா எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும்.

பசுவதையை நாட்டில் தடை செய்யும் முயற்சியில்இக்கோகுலாலயம்ஒரு புதிய முயற்சியாகும். கோசாலையத்தில் பசுக்களை புனிதமாக்கி தெய்வ அம்சமாக கருதிப் பூசிக்கப்படும்.

குமரக்கோட்டம் கோகுலாலய திறப்பு விழவுக்கு நல்லை ஆதீனம் மகாசந்நிதான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் தலைமை வகிப்பார்.

சைவ சித்தாந்த பண்டிதர், சிவாகமகிரியாரத்தினம் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், சாவகச்சேரி நீதிவான் சைவப் புலவர் திரு. மு. திருநாவுக்கரசு ஆகியோர் பிரத பேச்சாளர்களாக கலந்து கொள்வார்கள். (ஒ-31)

### சங்கம்

சாவகச்சேரியில் நகை அடகு வைததோர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப் படுகிறது (இ-75)

### மீனவருக்கு உதவி

கடந்த காலத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பத்து மீனவக் குடும்பங்களுக்கு தலா 15 000/- ரூபாவை கிராமிய சமூக அபிவிருத்தி நிறுவனம் ஒதுக்கி உள்ளது. (இ-73)

### பாலர் கலைப் போட்டி

பாலர் ஆசிரியர் சங்கம் நடத்தும் பாலர் கலைப் போட்டி நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் பாலர் ஆசிரியர் சங்க உறுப்பினராகவுள்ள ஆசிரியர் கற்பிக்கும் பாலர்கள் மட்டுமே பங்குபற்ற ாம்

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 20 ஆகும் (இ சி)

### வை.எம்.சி.ஏ. உதவி

அண்மைக் கால சம்பவங்களின்போது உயிரிழந்த அல்லது அங்கவீனமடைந்த குடும்பங்களில் உள்ள கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு நவாலி வை எம்.சி.எ. ஸ்தாபனத்தினர் பாதணிகள், உடுப்புக்கள், உணவு வகைகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றனர். (இ-90)

## சாரணர் இயக்கம் மூலம் நாட்டுக்குப் பணி புரியலாம்

மானிப்பாய், அக் 6 "ஒருவன் தனது சமயத்துக்கும், நாட்டுக்கும் செய்யவேண்டிய பணிகள் பல உள. சாரணர் இயக்கத்தின் மூலம் அவற்றை நிறைவேற்ற முடியும்.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நடைபெற்ற குருளைச் சாரணர்களுக்கான சின்னம்சூட்டு விழாவில் அதிபர் திரு.அ. தற்பரானந்தம் மேற்கண்டவாறு கூறினர்.

விழாவில் காங்கேசன் துறை மாவட்ட சாரணர் அலுவலர் திரு, இ. நவரத்தினம், மானிப்பாய் வட்டார சாரண உதவி ஆணையாளர் திரு. செ காசிநேசன் ஆகியோரும்கலந்து கொண்டனர்.

திரு. தற்பரானந்தம் மேலும் பேசுகையில்:-

சாரணர் இயக்கம் உலகளாவிய ரீதியில் பெரும் பாலான நாடுகளில் சிறப்பாக இயங்கிவருகின்றது

இவ்வருடம் நடைபெற்ற பேடன் பவல் நினைவு தினப் போட்டிகளில் மானிப்பாய்த தொகுதியில் மிகக்கூடிய இடங்களை எமது பாடசாலை பெற்றது மகிழ்ச்சிக்குரியது என்றார்.

காங்கேசன்துறைமாவட்ட சாரணர் அலுவலர் திரு இ. நவரத்தினம், மானிப்பாய் கல்வி வட்டார உதவிச் சாரண ஆணையாளர் திரு. செ. காசிநேசன், திரு. த, சண்முககுமார் ஆகியோரும் உரையாற்றினர்.

சின்னம் சூட்டிய சாரணர்களின் பாடல், நடன நிகழ்ச்சிகளும்நடைபெற்றன. (ச-90)

## மதி ஒளி கையெழுத்து பத்திரிகை வெளியீடு

யாழ்ப்பாணம் அக் 6 யாழ் இந்துக் கல்லூரி 8 ஆம் ஆண்டு 'சி' பிரிவு மாணவர்களின் "மதி ஒளி" கையெழுத்துப் பத்திரிகையின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கையெழுத்துப் பத்திரிகையில் சமய, சமூக,மொழி, விஞ்ஞான பாடசம்பந்தமான ஆக்கங்களும், சிறுகதை நாடகங்களும், ஆற்றலை வளர்க்கும் அறிவுச் சிந்தனைகளும் இடம்பெற்றுள்ளன.

வகுப்பாசிரியர் திரு. எஸ். திசைவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில்-

ஆசிரியர்கள் திரு.வே. சண்முகலிங்கம், திரு.கே. சிவகுமாரன் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு.ந. தங்கவேல், திரு.க. தவமணிதாசன் ஆகியோர் அறிவுரையுடன் ஆசியுரையும் வழங்கின

இதழாசிரியர் செல்வன் சி. சிப்பிரியன் நன்றி உரை நல்கினர். (இ-க)

## Universi y of Jaffna

**CERTIFICATE COURSE IN DATA PROCESSING AND BASIC LANGUA E PROGRAMMING**

The above course will be conducted in the English medium during weekends commencing from December 1988 Applications for admissions will be received by the University till 31st October 1988. The applicants should have the following minimum qual fications.

(a) Pass in at least two subjects at the G C. E. (A/L) Examination. One of the subjects should be Pure Mathematics. Applied Mathematics, Physics Chemistry. Botany, Zoology, Accounts, Commerce, Economics, Geography or Logic

and

(b) Pass in English at the G.C E (O/L). Examination or any other equivalent qualification.

Applications from students following courses in the Universities will not be considered.

Requests for forms and other particulars must be sent under registered cover to the Head, Computer Unit, University of Jaffna together with a Money order / Postal order for Rs. 20/- drawn in favour of the Bursar, University of Jaffna.

**Registrar,
University of Jaffna.**

Thirunelvely,
Jaffna.
4th October 1988. (C/369)


ஸ்கந்தஷஷ்டி - சூரசம்ஹார தினத்தில் - திருச்செந்தூரில்

156 ஆவது தென் இந்திய சமய சரித்திர கலாசார யாத்திரைச் சுற்றுலா
திருச்செந்தூர் - மதுரை - மட்ராஸ் - திருப்பதி - மைசூர் - பெங்களூர்
10-11-88 தொடக்கம் 16 நாட்கள்


விபரங்களுக்கு: ராஜா ரூர்ஸ், 168/1. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அதிபர்: வி. அமிர்தேஸ்வரராஜா (சமாதான நீதிவான்) (7148)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பன்னிரு போராளிகளுக்கும் அஞ்சலி!




தளபதி குமரப்பா




மேஜர் அப்துல்லா




தளபதி புலேந்திரன்




2ஆவது லெப்டினன்ட் ஆனந்தகுமார்



கப்டன் ரகுவப்பா




கப்டன் நளன்




கப்டன் மிரேஸ்




லெப்டினன்ட் தவக்குமார்



கப்டன் பழனி



லெப்டினன்ட் அன்பழகன்



2ஆவது லெப்டினன்ட் ரெஜினோல்ட்



கரன்

" மரணத்தை நாம் நேசித்தோம். மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டோம். இறுதி நேர இன்ப வேதனையை எம்மிடையே பகிர்ந்து கொண்டோம். தாயகத்தின் மண்ணிலே நாம் தூவிவிட்ட வித்துக்கள் — விரைவாகி முளைகொண்டு வலுவான மரமாகி - தமிழீழ மண்மீது நிழல் வீசி நிற்கும் என்பதால்.,. தமிழ் மரபு காத்து நின்று, தாயகத்து மண் மீட்க வேங்கை நிகர் வீரர் அணி வீறு கொண்டு எழுந்திடும் என்பதால்... எம் பாதையைத் தொடர்ந்திடும் என்பதால்... ஓ... ஓ... மறவர்களே ! இதயங்கள் திறக்கட்டும். "

— வீர மரணம் தழுவுமுன் பன்னிரு போராளிகள் கூறியவை

## திரையறியா ஓடமோ ஈழத்தமிழர் வாழ்வெல்லாம் ?

திரைகடலோடித் திரவியம் தேடினர் முன்னோர்
இரைகடல் வழியோடியே இயோர் வலைப்பட்டு
திசையறியாது, சிறைப்பட்டும் கலங்கிடவில்லை நீங்களும்
இயவர்தமை அழித்து நீங்களும் மாயும் வழிபிருந்தும்
விலைமதிப்பில்லா உயிர்களை விஷவழி தமிழுக்காய் ஈந்து
மாண்டீரோ மறக் குலத்தவரே!

யாழ் மாவட்ட மினிசினிமா சங்கமும், மினி சினிமா உரிமையாளர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிசம்பருக்கு முன் பூர்த்தி

யாழ்ப்பாணம், அக் 6 யாழ் மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டுக்கான இலவசப் பாட புத்தக விநியோகம் டிசம்பர் மாதத்துக்குள் பூர்த்தி செய்யப்பட்டு விடும். இதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இவ்வாறு யாழ் கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-க)

## ஈராண்டு நினைவஞ்சலி



**திரு. சுப்பிரமணியம் குமாரசுவாமி**
வடபகுதி பவலூம் எடிற்றர்
(Power Loom Editor)

தோற்றம்:- 9-10-1918　　மறைவு:- 5-10-1986

எம்மைப் பாதுகாத்த தெய்வமே!
அன்பும் பாசமும் காட்டி வாழ்ந்த
தெய்வப் பிறவியே!
எம்மை விட்டுப் பிரிந்தீர்களே
மறக்க முடியாத ஆழ்ந்த துயரப்படுகிறோமே!
உம்மை மறக்க முடியவில்லையே
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவியும், பெருமக்களும்.
மருமக்களும்.

29/1, பிரப்பங்குள லேன்,
யாழ்ப்பாணம். (6924)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் தர்மபாலன் புருஷோத்**

மலர்வு:- 04-10-1986　　உதிர்வு:- 18-10-1987

**திதி 06-10-1988**

ஓராண்டு சென்றதடா!
இல்லம் இருண்டதடா!
எமதுள்ளம் துடிக்குதடா!
உன் அழகுத் திருமுகமும்.
- பட்டுக்கன்னமதில்
குழிவிழும் புதுமுகுப் புன்னகையும்-
தத்தித் தளிர் நடையும்
தினமும் தெரியுதடா!
எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டுவிட்ட
எங்கள் அன்புச்செல்வமே!
குடும்பக் குல விளக்கே!
உன் ஆத்மா சாந்தியடையதினமும்
கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம்.

அப்பா, அம்மா,
உற்றார், உறவினர்.

53, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம். (6941)

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# நிபந்தனைகளுடன் டிராக்டர்

## பயன்படுத்த அமைதிப்படை அனுமதி

புதுக்குடியிருப்பு அக். 6 சில நிபந்தனைகளுக்கு அமைய, முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள், விவசாயத் தேவைகளுக்கு டிராக்டர்களைப் பாவிப்பதற்கு பிரிகேடியர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதுவரை முல்லைத் தீவுப்பகுதி மக்கள் விவசாயத் தேவைகளுக்காக தமது டிராக்டர்களைப் பாவிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து மக்கள் பிரதிநிதிகள் தத்தமது உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக தமது இடர்ப்பாடுகளை தெரிவித்திருந்தனர்.

இதன் பயனாக முல்லைத்தீவு இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள் மட்டத்திலான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. சிவசாமி, காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. மாசிலாமணி, புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. அ. இராஜரத்தினம், முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் பங்கு பற்றி தத்தம் பகுதி மக்களின் விவசாயம் பாதிக்கப்பட்டால் எதிர்நோக்க உள்ள கஷ்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்.

இதன் பின்பே விவசாயத் தேவைகளுக்காக டிராக்டர்களைப் பாவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் கீழ்க்காணும் நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

★ குமிழமுனை முள்ளியவளை விவசாயிகள் தண்ணிமுறிப்பு வரை டிராக்டர்களைக் கொண்டு செல்லலாம். ஆனால் அணைக்கட்டுக்கு அப்பால் செல்லக் கூடாது. அதேசமயம் தண்டுவான், நெடுங்கேணிப் பிரதேசத்தில் இருந்து எவரும் தண்ணிமுறிப்புக்கு டிராக்டர்களைக் கொண்டு செல்ல முடியாது.

ஆண்டான்குளம் காட்டுப்பகுதி தொடர்ந்தும் தடுக்கப்பட்ட பிரதேசமாகவே இருந்துவரும்.

★ தண்ணிமுறிப்பு குளக்கட்டு சுளூஸ் கதவுகளின் பராமரிப்பு வேலையை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொள்ளும்.

★ முத்தையன்கட்டு விவசாயிகள் டிராக்டர் பாவிப்பதற்கான அனுமதி பற்றி மாங்குளம் பகுதி பிரிகேடியரிடம் தொடர்பு கொள்ளலாம். உடையார்கட்டு, விஸ்வமடுக்குளம் விவசாயிகள் கிளிநொச்சிப் பகுதி பிரிகேடியரிடம் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான அறிவித்தல் கொண்ட சுற்றறிக்கையொன்று அரசாங்க அதிபரினால் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-126)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1988-10-31 ஆம் தேதி வரையில் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. பெய்பியலில் சிரேட்ட விரிவுரையாளர்/விரிவுரையாளர்/ உதவி விரிவுரையாளர்
2. அரசறிவியலில் உதவி விரிவுரையாளர்

இவ்வலுவலகத்தில் பெறக்கூடிய விண்ணப்ப படிவங்களில் விண்ணப்பம் செய்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் ஏனைய விபரங்களையும் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப் பெற்ற 23 × 10 ச மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அத்தகைய நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

சிரேட்ட விரிவுரையாளர் / விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர் பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்து சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

பதில் பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
29-09-1988 (C-368)

## புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
**A/L**
**DAY CLASSES**
**3-10-88 ஆரம்பமாகிவிட்டன**
(C353)

## பூசகர் உடன் தேவை
மூளாய் முத்துக் குமாரசுவாமி கோவில்
மூளாய், சுழிபுரம்.

பூசை செய்வதற்குப் பூசகர் உடன் வேண்டும். அவருக்கு வேண்டிய இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். நேரடியாகவோ, கடிதம்மூலமோ கீழ்வரும்முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சம்பளவிபரம் நேரில்பேசித் தீர்க்கப்படும்.

இ. பொன்னையா
தர்மகர்த்தா
மூளாய் முத்துக் குமாரசுவாமி கோவில்.
(7139)

## பழம்பெரும் பிள்ளையார் சிலை கண்டுபிடிப்பு

கல்முனை, அக் 6 சம்மாந்துறைத் தொகுதியைச் சேர்ந்த பழம்பெரும் தமிழ்க் கிராமமாக வீரமுனையில் உள்ள ஆசிரியை ஒருவரின் வளவில் வீடுகட்டுவதற்கு அத்திவாரம் வெட்டிய போது ஒரு அடி உயரமான பிள்ளையார் உருவமுள்ள சிலையொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

துதிக்கையால் உணவு அருந்து மாதிரியான அமைப்பிலுள்ள பிள்ளையார் சிலை ஐம் பொன்னினாலானதாகும்.

இச்சிலை கி. பி. 805ல் சீதாதேவியால் இங்கு வழிபாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட விக்கிரகங்களுள் ஒன்று என சொல்லப்படுகிறது. தற்போது பொது மக்களின் வழிபாட்டிற்காக இப்பிள்ளையார் சிலை வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## ● அதற்கு இடமளிக்க மாட்டாராம் ஜே. ஆர்

கொழும்பு அக 6 பர்மா பாணி கிளர்ச்சிக்கு இடமளிக்கமாட்டேன்—

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

## ஆண்டு 6க்கான பிரவேசம்-1989

ஆண்டு 6க்கு விண்ணப்பித்தவர்கள் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை கல்லூரி அலுவலகத்தில் 21-10-88, 25-10 88 ஆகிய திகதிகளில் கல்லூரிக்காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். பரீட்சை 29-10-88 இல் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் நடைபெறும்.

- அதிபர்

(C99)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி
## (181 ஆவது நாள்)



செல்வன்
**கிருஷ்ணபிள்ளை ஜெயபாலா (பாலா)**
(யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர மாணவன்)

தாயக மண்ணில்: 30-04-1968　　அநியாயஅழிப்பு: 05-04-1988

சுதுமலைத்தாய் ஈன்றெடுத்த
மாவீரனே பாலா!
அளவற்ற பாசமது அந்தரிக்க வைத்ததே
அடிகள் இரண்டு போட்டிருந்தால் - உன்
காலடிகள் இம் மண்ணில்
பதிந்து கொண்டிருக்கும்
பட்டங்களைச் சுமந்து வந்து
பணக் கொட்டமதை அடக்குவாய் - என
நினைத்திருந்தோம் - ஆனால்!
கண்ணிமைக்கும் நேரத்தினுள்
காலன் உன்னைப் பறித்தானே!
காலமெல்லாம் காத்திருந்து
காலனுடன் உனைச் சேர்த்தவர்களை
நீ, தோழனென்று
துணை சேர்த்தாய்
தோள் கொடுப்பான் தோழனென்று
எண்ணியிருந்தாய் - ஆனால்
தோலைத்தான் உரித்தெடுத்தார்
இன்று உன் உடலை மட்டும்தான்
இழந்து நிற்கின்றோம் - நினைவையல்ல!
நித்தமும் எம் கண்களுக்குள்
நீ - காட்சி தருகின்றாய் -

உன்பிரிவால் சித்தம் கலங்கி
நிற்கும் அன்பிற்கினிய
**பெற்றோரும், உடன் பிறப்புக்களும்.**

கதுமலை வடக்கு.
மானிப்பாய். (6947)

# சொறி சிரங்குக்கான தடை மருந்து விநியோகம்

## தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம்

அச்சுவேலி, அக் 6 சொறி, சிரங்கு நோய்க்கான தடை மருந்துகளை எல். ஆர். எஸ். எஸ். நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இலவசமாக வழங்கி வருகின்றது.

யாழ். குடாநாட்டில் பரவலாகக் காணப்படும் சொறி சிரங்கு நோயைக் குணப்படுத்துவதற்கான பூச்சு மருந்துகளையும் குடற்பூச்சிக்கான மருந்துகளையும் எல். ஆர். எஸ் எஸ். நிறுவன பிரதிநிதிகள் பாடசாலைகள் மற்றும் கிராமங்களில் உள்ள பொதுஸ்தாபனங்கள் மூலம் மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் வழங்கி வருகின்றனர்.

தற்பொழுது பயன்படுத்தப்படும் புதிய பூச்சுமருந்து ஒருகடவை உடலில் பூசி 24 மணி நேரம் கழுவாமல் இருந்தால் சொறி சிரங்கு நோய்முழுமையாக குணமடைவதாகவும் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் தோறும் சென்று மருந்து பூசப் பட்டுவருவதாகவும்— இந்த இலவச மருத்துவ வசதியைப்பெறவிரும்பும் கிராமமக்கள், பொதுஸ்தாபனங்கள் தமது நிறுவனத்துடன் தொடர்புகொண்டு மருத்துவ வசதியைபெற்றுக்கொள்ளலாம் என அந்நிறுவனத்தின் பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஓ-11)

## பஸ் நிலைய சம்பவத்தில் காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், அக் 6 கடந்த செவ்வாய்க் கிழமை யாழ் பஸ் நிலையப்பகுதியில் இடம் பெற்ற சம்பவத்தில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:

சிவலிங்கம் யோகேஸ்வரி (வயது 25 - மல்லாகம்), யோகலிங்கம் சாந்தநாயகி (வயது 25-சுன்னாகம்), ஆனந்தன் பஞேரமா (வயது 27 - தெல்லிப்பளை) இவர்கள் மூவரும் யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள்.

மற்றும் எஸ். ரூபன் (வயது - 26 இணுவில்), எஸ். கணேஸ் (வயது 23 - யாழ்ப்பாணம்), எஸ் சுப்பிரமணியம் (வயது 48 - உரும்பராய்), க. சண்முகநாதன் (வயது 35 ஆனைக்கோட்டை). செல்வராசா ஆனந்தராசா (வயது 21 - யாழ்ப்பாணம்), கந்தையா இராசன் (வயது 32 - மல்லாகம்), அரியகுட்டி நடராசா (வயது 31-கோண்டாவில்), க பிரபாகரன் (வயது 22 - யாழ்ப்பாணம்), வி பொன்னம்பலம் (வயது 29-யாழ்ப்பாணம்). இ அன்ரன் (வயது 65). (ஓ-10)

## இங்கும் அந்த வதந்தி

குருநகர், அக்.6 கண் தோண்டும் வதந்தி யாழ் நகர் மணியம் தோட்டம் கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் பகுதிகளிலும் வேகமாகப் பரவி உள்ளது.

இதன் காரணமாக பாடசாலைச் சிறுர்கள், பெற்றோர்கள் மத்தியில் பதற்றமும். கிலியும் நிலவின. (ஓ-51)

## உன் நினைவில் ஓராண்டு

06-10-1988
நினைக்கிறோம் நின்னை
நிதம் கண்ணீரால்
நனைக்கிறோம் நம்மை



கீழ்வானில்: 25-4-1952

மேல்வானில்: 17-10-1987

**திரு. நாகமுத்து கதிர்காமநாதன் (கதிர்)**

ஆண்டு ஒன்றல்ல
ஆயிரம் தான் ஆனாலும்
ஈண்டு உம்நினைவு
எமை விட்டு நீங்காது
மீண்டு(ம்) நீர் வருநாள்
மகிழ்வுடனே பார்த்திருப்போம்
வேண்டு(ம்) நீரிங்கே
விண்ணரசே விரைந்திடுவீர்

மக்கள் இருவரும் மாசற்ற மனைவியும்
விக்கல் அழுகையினால்
விண்ணை அடைத்தனரே!
'சொர்க்கம்' மறைந்ததென
சோர்ந்து விழுந்தனரே!
பக்கம் வாருமென
பரிவாய் அழைத்தனரே!!!

அன்புத் தந்தையாய்
ஆருயிர்க் கணவனாய்
இன்பந் துய்த்திருக்க
'இறை'க்கு மனமில்லையோ?
சொந்தச் சோதரரும்
சுந்தரத் தாயாரும்
சிந்தை கலங்கியிங்கே
சேர்ந்து துடிக்கின்றார்

எங்களுக் குதவியென
நம் ஈழா விங்கிருக்க
இங்கிதமாம் வாழ்வை
இடையில் விட்டெறிந்த
தங்கமயக் கதிரே, நீ!
தரணியை விட்டகன்ற
பங்கமிலான் பாதம்
பரிவுடன் சேர்ந்தனையோ?

மனைவி, மக்கள், தாயார்,
சுற்றத்தார், நண்பர்கள்.

மல்லாகம். (7142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து

**பொருள்:**

வீரன், கழிந்த தன் நாட்களைக் கணக்கிட்டு, விழுப்புண்படாத நாட்களை எல்லாம் பயன்படாமல் தவறிய நாட்களுள் சேர்ப்பான்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல- 292/2 நாவலர் வீதி தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
06-10-1988


## மீண்டும் உண்ணாவிரதம்

தென்னிலங்கையில் உள்ள பூஸா தடுப்பு முகாம் உண்ணாவிரதத்துக்குப் பெயர் பெற்றதாகி விட்டது. அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் அடிக்கடி உண்ணாவிரதமிருந்ததால் பூஸாவும் சரித்திரத்தில் இடம் பிடிக்கப் போகிறது!

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, தமிழ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு அளிக்க வகை செய்யப்பட்ட பின்னரும் கடந்த பதினைந்து மாதங்களில் பல உண்ணாவிரதப் போராட்டங்களைப் பூஸா முகாம் கண்டுவிட்டது.

தேர்தலை நாடி கடந்த மாதத்தில் சுமார் 500 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இன்னும் 209 தமிழ் அரசியல் கைதிகள் தென்னிலங்கைச் சிறைகளில் வாடுகிறார்கள். அவர்களைப் போலவே சத்தியக் கடதாசியில் ஒப்பம் வைத்த ஏனைய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கைதிகள் விடுவிக்கப்பட்டு விட்டனர். ஆனால் 209 தமிழ் அரசியற் கைதிகளுக்கோ இன்னும் விடிவில்லை.

இன்னும் சிறையில் பூட்டப்பட்டிருக்கும் அத்தனை தமிழ் அரசியற் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி பூஸாவில் கடந்த முப்பதாம் திகதி தொடக்கம் ஐவர் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர்.

தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவது குறித்து தண்டிக்கப்பட்ட அரசியற் கைதிகள் இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் மஜர் மூலம் முன்னறிவித்தல் கொடுத்திருந்தனர். ஏனைய கைதிகளை விடுதலை செய்யும் போது, அரசியற் கைதிகள் என்ற வகுப்புகள் அடங்கும் தங்களை மட்டும் விடுதலை செய்யாமல் இருப்பதன் நியாயம் என்ன என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அவர்களின் கேள்வியும், நியாயமும் இரு நாட்டுத் தலைவர்களின் காதுகளிலும் விழவில்லை! சம்பந்தப்பட்ட மகஜரின் பிரதிகள் தலைவர்களின்; உதவியாளர்களின் குப்பைக் கூடைகளுக்குள் விழுந்திருக்க வேண்டும்!!

தண்டிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதத்தைத் தொடங்கி ஐந்து நாட்களாகியும் அவர்களைப் பற்றி இலங்கை அரசோ இந்திய அரசோ எள்ளளவேனும் அக்கறைப்படவில்லை. உண்ணாவிரதம் இருக்கும் ஐவரும் ஒன்பதாம் பத்தாம் திகதியிலிருந்து நீராகாரம் இன்றி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போகிறார்கள்.

அந்த ஐவரும் இந்நாட்டின் பிரஜைகள்; அவர்கள் அநியாயமாக உயிர் இழக்க நேரிடலாம் என்ற சிந்தனையோ நினைப்போ இல்லாமல் இரண்டு அரசுகளும் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்களை ஏற்பதில் தான் தமது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றன.

முன்னர் பல தடவைகள் செய்தது போல வெறும் வாக்குறுதிகளை வழங்கி, அஹிம்சைப் போராட்டத்தை முறித்துவிட்டுப் பின்னர் தான் நினைத்தது போல நடந்து கொள்ளலாம் என இலங்கை அரசு நினைக்கக் கூடும்.

ஆனால் உண்ணாவிரதிகள் உறுதியுடன் இருப்பதாக அறிகிறோம் எந்நிலை வரினும், வெற்றி கிடைக்கும் வரை தங்கள் போராட்டத்தைக் கைவிடுவதில்லை என்று அவர்கள் உறுதி பூண்டிருக்கிறார்கள்.

அஹிம்சைப் போராட்டத்துக்கு மதிப்பளித்து திலீபனின் உண்ணாவிரதத்தைத் தடுக்க இந்தியாவோ, இலங்கையோ நடவடிக்கை எடுக்காததால் அவற்றுக்கு உலகில் கிடைத்த அவமதிப்பை இரண்டு அரசுகளும் மறந்து போயினவா?

உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை நியாயமற்றது என்று எவரும் சொல்ல இயலாது. ஒப்பந்தத்தில் கூறப்பட்ட ஒரு விடயத்துக்கு நேரத்துக்கு நேரம், தனது எண்ணத்துக்கு வசதியாக அர்த்தம் கற்பிக்க இலங்கை அரசுக்கு என்ன துணிவு? அதைத் தட்டிக் கேட்க இந்திய அரசுக்கு ஏது தயக்கம்? "செய்வன திருந்தச் செய்" என்று கூறுவதற்காவது இயலாதா?

உண்ணாவிரதம் இருப்போர் விடயத்தில் சிறைக்கு வெளியே உள்ள பொதுமக்களின் ஆதரவு மிகவும் அவசியம் அவர்களை விடுவிக்குமாறு கோரி அஹிம்சைப் போராட்டங்களை தமிழ்ப் பகுதி எங்கும் நடத்த வேண்டும் ஏற்கனவே செய்தது போல, உண்ணாவிரதிகளுக்கு ஆதரவு தெரிவித்து அடையாள உண்ணாவிரதங்களை ஏற்பாடு செய்யலாம்; ஊர்வலங்களை நடத்தலாம். அப்போது தான் இரண்டு அரசுகளின் கண்களையும் திறக்கச் செய்ய முடியும். மக்கள் கருத்துக்குச் செவிசாய்க்காத அரசுகள் எதுவுமே சர்வாதிகார அரசுகள் என்ற நிலைப்பாட்டை வெளி உலகுக்குக் காட்டவும் முடியும்.

# பாகிஸ்தான் பொதுத்தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும்

## பதில் அதிபர் உறுதி

இஸ்லமபாத் அக் 5

திட்டமிட்டபடி நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நவம்பரில் நடத்தப்பட்டே தீரும் என்று பாகிஸ்தான் பதில் அதிபர் குலாம் இஷாக் கான் அறிவித்தார்.

கலவரங்களினால் பாதிக்கப்பட்ட கராச்சி, ஹைதராபாத பகுதிகளுக்கு விஜயம் செய்து நேரில் பார்வையிட்ட பின்னர் பதில் அதிபர் இஷாக்கான் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போதே இத்தகவலை அவர் வெளியிட்டார்.

நவம்பர் 16 இல் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் குழப்பும் நோக்குடன் தான் சில சக்திகள் இந்த இனக் கலவரத்தைத் தூண்டிவிட்டுள்ளது என்றும் பதில் அதிபர் குற்றம் சாட்டினார். (எ)

## பழுதான கார்களை விற்ற நிறுவன உரிமையாளருக்கு இருபது லட்சம் டாலர் அபராதம்

நியூயார்க் அக்-5

பழுதடைந்த கார்களை திருப்பி விற்றதற்காக அமெரிக்காவில் உள்ள பிரபல கார் உற்பத்தியாளர் ஒருவருக்கு 20 லட்சம் டாலர் அபராதம் விதிக்கப்பட்டது.

இத்தகவலை அமெரிக்க சட்ட மாஅதிபர் வெளியிட்டார்.

கம்பெனியில் இருந்து வெளியே விற்பனைக்கு விடப்பட்ட கார்களில் 414 பின்னர் பழுதுள்ளவை என்று கண்டு பிடிக்கப்பட்டது.

அவற்றைத் திருப்பிப் பெற்றுக் கொண்ட கம்பெனி, அப்பழுதுகளைத் திருத்தாமல் அப்படியே மீண்டும் விற்பனைக்கு விட்டதாக குற்றஞ்சாட்டப் பட்டது.

குற்றம் நிரூபிக்கப் பட்டதைத் தொடர்ந்து சம்பெனி உரிமையாளருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (எ)

## மீண்டும் ரொக்கட் தாக்குதல்

காபூல், அக். 5

ஆப்கனிஸ்தானில் ஜலலபாத் நகர் மீது கிளர்ச்சிக்காரர்கள் நடத்திய இரண்டாவது ஏவுகணைத் தாக்குதலில் ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் பட்டது (எ)

## பர்மாவில் மீண்டும் சகஜ நிலை

ரங்கூன் அக் 5

பர்மாவில் இராணுவ அரசு முதலாவது எதிர்க்கட்சிக்கு அங்கீகாரம் வழங்கியது

மூன்று கட்சிகள் சேர்ந்து அமைத்த எதிர்க்கட்சிக் கூட்டணியே அங்கீகாரம் பெற்றது.

இதனிடையில் 6 வாரங்களாக வேலை நிறுத்தம் செய்து வந்த அரசு ஊழியர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டனர்.

தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர் பதவிநீக்கம் செய்யப்படுவர்; சிறையில் அடைக்கப்படுவர் என்று இராணுவ அரசு விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்தே ஊழியர் வேலைக்குத் திரும்பினர் என்று அறிவிக்கப்படுகிறது (எ)

## பல நாடுகளில் மனித உரிமை மீறல்; சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

என்றுமில்லாத வகையில் பெரும்பாலான நாடுகளில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்திருக்கிறது.

சர்வதேச மனித உரிமைச் சாசனம் கையெழுத்திட்டு நாற்பது ஆண்டுகள் கழிந்த பின்னர் முன்னெப்பொழுதுமில்லாதவாறு மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவது கவலைக்குரியது என்று சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் கூறியிருக்கிறது.

## உச்சிமாநாடு

சிறுப்பு இன நாடுகளுடன் தென் ஆபிரிக்காவும் கலந்து கொள்ளக் கூடிய பிராந்திய உச்சி மாநாடு விரைவில் நடைபெறக் கூடிய வாய்ப்பு உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

ஸயாரே நாட்டு அதிபர் மொபுட்டுவுடன் பேச்சுக்கள் நடத்திய பின்னர் தென் ஆபிரிக்க ஜனாதிபதி பிக்போத்தா தாயகம் திரும்பினார். அதைத் தொடர்ந்தே இந்த நம்பிக்கை வெளியிடப்பட்டது. (எ)

## சுவர் விழுந்து 11 பேர் பலி!

கடும் மழை காரணமாக பம்பாயில் 11பேர் உயிரிழந்தனர்

வீட்டுச்சுவர் ஒன்று இடிந்து விழுந்து பலர் நசுங்கினர் அப்போதே இந்த உயிரிழப்பு இடம் பெற்றதாக அறிவிக்கப் பட்டது (எ)

## சிலியில் தேர்தல்

சிலி மக்கள் நேற்றுச் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றில் வாக்களித்தனர்

15 ஆண்டுகளாகப் பதவியில் இருக்கும் அதிபர் பினசவுக்கு மேலும் எட்டு ஆண்டுகள் ஆட்சி புரிய அனுமதிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கவே இந்தவாக்கெடுப்பு நடத்தப்பட்டது

## ஐ. நா. வில் இந்திய அமைச்சர் உரை

ஐ நா. அக் 6

ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் நேற்று இந்திய வெளியுறவு அமைச்சர் பி வி. நரசிம்மராவ் பேசினார்.

ஆப்கான் தீர்வு பற்றிய ஜெனிவா உடன்பாடு, மீறல்கள் எதுவுமின்றி அமுல் நடத்தப்பட இந்தியா உதவும்.

பர்மாவில் மீண்டும் ஜனநாயகம் ஏற்பட வேண்டும் என்பதே இந்தியாவின் ஆசை பிஜியில் சகல பிரசைகளின் அடிப்படை உரிமைகளும் பேணப்பட வேண்டும் என்பதில் இந்தியாவுக்கு அக்கறை உண்டு.

இப்படி திரு நரசிம்மராவ் பேசினார் .(எ)

## ராஜீவ் தமிழ் நாட்டில்

தமிழகத்தின் 20 ஆண்டு கால இருள் சூழ்ந்த ஆட்சியை மாற்றி அமைக்க வேண்டும்.

பிரதமர் ராஜீவ் காந்தி, அண்ணா மாவட்டத்துக்கு விஜயம் செய்த போது முன்னண்டவாறு தெரிவித்தார்.

## 'டிஸ்கவரி' விண்கலம் தரையிறங்கியது!

கலிபோர்னியோ, அக் 5

அமெரிக்காவின்வெளிக்கலம் டிஸ்கவரி' நான்கு நாள் விண்வெளிப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று இரவு எட்வார்ட் விண்வெளி நிலையத்தில் தரையிறங்கியது.

சுமார் 3லட்சம் மக்கள் 'டிஸ்கவரி' கரை இறங்குவதை நேரில் பார்த்தனர்.

சரியாக நான்கு நாட்கள் ஒரு மணித்தியாலம் வானவெளியில் 27லட்சம் கிலோ மீற்றர் தூரம் பயணஞ்செய்தது 'டிஸ்கவரி'.

நான்கு விண்வெளி வீரர்கள் இக்கலத்தினுள் பயணஞ் செய்தனர்.

தரையிறங்கிய 'டிஸ்கவரி' யினுள் இருந்து வெளியே வந்த விண்வெளி வீரர்களை அமெரிக்க உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வரவேற்றார்.

1986 இல் 'சலஞ்சர்' விண்கலம், வானவெளிக்கு ஏழு வீரர்களுடன் ஏவப்பட்ட சில விநாடிகளில் வெடித்துச் சிதறியது அப்போது 7 வீரர்களும் மரணமடைந்தனர்

அதன் பின்னர் விண்வெளிக்கு அமெரிக்காமனிதர்களை அனுப்பியது இதுவே முதல் தடவை ஆகும். (எ)

## சோவியத்தின் புதிய கொள்கை வகுப்பாளர்

மாஸ்கோ, அக் 5

சோவியத் யூனியன் அரசுத் தலைமைப்பீடத்தின் புதிய கொள்கை வகுப்பாளராக திரு வாடிம் மெட்வெடேவ் நியமிக்கப்பட்டிருக்கிறார் பொலிற்பீரோ உறுப்பினராகவும் அவர் நியமிக்கப்பட்டார்.

59 வயதான அவரே இதனைச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் மக்கள் வங்கிகளில்

# நகை அடகு வைத்தோருக்கு 88 ஜனவரிக்குப் பின் வட்டியில்லை

## சுற்றுநிருபம் வந்தது

யாழ்ப்பணம் அக் 6

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்கள்வங்கிக் கிளைகளில் நகைகளை அடகுவைத்தோரிடமிருந்து 1-1-88 முதல் வட்டி எதுவும் அறவிடப்படமாட்டாது.

வடக்கு,கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு மாத்திரமே மக்கள் வங்கி இந்தப் பிரத்தியேக சலுகையை வழங்கியிருக்கிறது.

இதுசம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்று யாழ் பிராந்திய மக்கள் வங்கி அலுவலகத்துக்குக் கொழும்பிலுள்ள மக்கள் வங்கி தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்ப் பகுதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகளை அடகு வைத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் பற்றி அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

★ வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகளை அடகு வைத்தவர்களுக்கு 31-12-87 வரையில் 30 சதவீத வட்டியே அறவிடப்படும்

★ 1-1-84 லிலிருந்து 31-12-87 வரைக்கான காலப்பகுதிக்கு 20 சதவிதமான வட்டியே அறவிடப்படும்.

★ 1-1-88 லிருந்து வட்டி எதுவும் அறவிடப் படமாட்டாது.

★ அடகு வைத்த நகைகளை மீளப்பெறுவதற்கான பணத்தை 31-12-88 க்குமுன் செலுத்தினால் 20 சதவீதமான வட்டி 15 சதவீதமாகக் குறைக்கப்படும்.

★ அடகு வைத்த நகைகளுக்கான வட்டியையும் முதலையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது வட்டித் தொகை முதலையும் விட அதிகமாகி விட்டால் சம்பந்தப்பட்ட வட்டித்தொகை முதலின் தொகைக்கு சமமாகக் குறைக்கப் படும்.

நகைகளை மீளப்பெறுவதற்கு வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் ஏற்கனவே பணத்தைச் செலுத்தியவர்களுக்கு இந்தச் சலுகைகள் காரணமாக அவர்கள் செலுத்திய மேலதிகப் பணம் எதுவும் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது (ஒ-ஐ)

சாகும் வரை

## உண்ணாவிரதம் இருக்க கிட்டு அனுமதி கோருகிறார்

சென்னை, அக் 6

சென்னை மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான திரு. கிருஷ்ணகுமார் (கிட்டு) அங்கு சாகும் வரை உண்ணாவிரதமிருக்க முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் அவர் அனுமதி கோரியிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளைக் கைது செய்து மத்திய சிறையில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்வைத்திருக்கும் நடவடிக்கையை எதிர்த்து உண்ணாவிரதமிருக்க திரு. கிட்டு முடிவு செய்திருக்கிறார்

இதனிடையில் சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அனைவரும் திலீபன் நினைவாக சென்ற திங்கட்கிழமை ஒருநாள் உண்ணாவிரதமிருந்தனர் என்று [illegible] செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. (உ-எ)

## 4 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன

முல்லைத்தீவு அக் 6

முல்லைத்தீவில் நாலு பேரின் எலும்புக் கூடுகள் அண்மையில் கண்டெடுக்கப்பட்டன. வற்றாப்பளையைச் சேர்ந்த திரு. செல்லம் என்பவரதும், அவரது மனைவி, இரு குழந்தைகளினதும் எலும்புக்கூடுகள் அவை என தெரியவந்துள்ளது.

இவர்கள் கடந்த மாசம்பரில் வற்றாப்பளையிலிருந்து சைக்கிளில் முல்லைத்தீவு வைத்திய சாலைக்குச் சென்றதாகவும் பின்பு இவர்கள் வீடு திரும்பவில்லையென்றும் கூறப்படுகிறது

கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு குஅண்மித்த மாங்குளம் வீதியில் 3ஆம் கட்டைப் பகுதியில் கூடலுக்குள் பனங்காய் எடுக்கச் சென்றவர்களால் இந்த எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அவை பின்னர் தகனம் செய்யப்பட்டன.

(ஓ ஐ-94)

## சுகாதார மத்திய நிலையம்

மானிப்பாயில் சுகாதார மத்திய நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இச்சுகாதார மத்திய நிலையத்தில் ஆரம்ப குடும்பநல சேவையாளர்கள் தங்குவதற்கு வசதியான விடுதிகள் மற்றும் நோயாளர் பரிசோதனை நிலையம், சிகிச்சை அறைகள் போன்றன அமைக்கப் படும்.

யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற சுகாதார மத்திய நிலையங்கள் கோப்பாய், சாவகச்சேரி [illegible] அமைக்கப்பட்டுள்ளன என சுகாதார சேவை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (ச-90)

## தொழில் நுட்பக்கல்லூரியில் பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பணம், அக் 6

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் கைத்தொழில் நிர்மாணக் துறையின் பயிற்சி நெறித் திட்டங்கள் இன்று ஆரம்பிக்கப் பட்டன.

இப் பயிற்சி நெறியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

மின் இணைப்பு, நீர்க் குழாய்த் தொழில், தச்சுவேலை, மேசன் வேலை போன்றவற்றுக்கான பயிற்சி நெறிகளே ஆரம்பிக்கப்பட்டன.

இப் பயிற்சி 50 நாட்களுக்கு யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும்

அதன்போது நாள் ஒன்றுக்கு 12 ரூபா வேதனம் வழங்கப்படும்.

தொழில் நுட்பக் கல்லூரியில பயிற்சி நெறியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கு அரச திணைக்களங்களில் மேலும் பயிற்சி வசதி அளிக்கப் படும். (ஓ-10)

## வலிகாமம் தெற்கில் திருத்தல பாதயாத்திரை

பாணிப்பாய், அக். 6

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஞாயிறு முதல் நாளை 7ஆம் திகதி வரை திருத்தல பாதயாத்திரை நடைபெறுகிறது

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட ஆலயங்கள், பெளத்தஸ்தாபனங்கள் ஆகியவற்றினதும் சைவ அன்பர்களினதும் ஆதரவுடன் ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா முத்தையா தலைமையில் ஆறு நாட்கள் இத்தல பாதயாத்திரை நடைபெறும்

வலி-தெற்கு பிரிவிலுள்ள சகல ஆலயங்களுக்கும் பாதயாத்திரை செல்லும்

இன்றைய சூழ்நிலையில் தமிழர்படும் துன்பங்களில் இருந்து விடுதலை அடைவதற்கும்—

சுபீட்சமான அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கும் இறைவனின் அருள் வேண்டி இப்பாதயாத்திரை மேற்கொள்ளப்படுகிறது,

இச்சுதல யாத்திரை புன்னாலைக்கட்டுவன் ஆலயடியில் பிள்ளையார் கோயிலில் ஆரம்பித்து இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் முடிவுறும் அன்றைய தினம் பொதுக் கூட்டமும் நடைபெறும். (உ 90)

## ஸ்கந்தவரோதய கலலூரி விழா

யாழ்ப்பாணம் அக் 6

ஸ்கந்தவரோதயக் கல்லூரி தாபகர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றன

காலை 9. 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் வைபவம் நடைபெறும்

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன் பரிசளிப்புப் பேருரை நிகழ்த்துவார்.

சட்டத்தரணி திரு. ப. அரவிந்தன தாபகர் நினைவுரை நிகழ்த்துவார்

திருமதி மல்லிகா தில்லைநாதன் பரிசில்களை வழங்குவார்

டாக்டர் திருமதி த. சுபணதேவி நன்றியுரை நிகழ்த்துவார் (இ)

## இந்தச் சீருடை அணிய முடியாது

கொழும்பு அக் 6

வடக்கு—கிழக்குமாகாணங்களுக்கு வெளியே பொலிஸ் மும், பாதுகாப்புப் படையிலும் "காமபிளாஜ்" சீருடை அணிய முடியாது.

பாதுகாப்பு அமைச்சகம் இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது

உத்தரவு உடனடியாக அமுலுக்கு வரும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
* மணிப்புரி
* காஞ்சிபுர * பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

# உதயன்

06 - 10 - 1988 வியாழக்கிழமை

சேட்டிங்ஸ் * சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
**மயூரா சென்ரர்**
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

## தி.மு.க- முஸ்லிம் லீக் உறவு முறிந்தது!

சென்னை, அக் 6
திராவிட முன்னேற்றக்கழகத்துடனை உறவைத் துண்டித்துக் கொள்வதாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நேற்று முறைப்படி அறிவித்தது.

முஸ்லிம் லீக்கின் செயற்குழுக் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது.

அப்போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தேசிய முன்னணியில் இருந்து தி. மு. க விலகாவிட்டால் அதனுடனை தேர்தல் கூட்டு மற்றும் உறவுகளை முறித்துக் கொள்வதாக முஸ்லிம் லீக் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் அப்துல்ஸமது தெரிவித்தார்.

அப்துல் ஸமதுவின் பேச்சு, முஸ்லிம் லீக்கின் உத்தியோக பூர்வமான அறிவிப்பு அல்ல என்று முஸ்லிம் லீக் மாநிலச் செயலாளர் அப்துல் லத்திப் மறுப்பு விட்டிருந்தார்.

இதற்காக ஜனாப் அப்துல் லத்திப்பை முஸ்லிம் லீக்கில் இருந்து வெளியேற்றுவதுஎன்றும் நேற்று நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ-எ)

## ஜனாதிபதித் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு இம் மாத நடுப்பகுதியில்

கொழும்பு, அக்.6
ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களைக் கோரும் உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தட சில்வா இம் மாத நடுப்பகுதியில் வெளியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

ஆனால் அது சம்பந்தமான உத்தியோக பூர்வ அறிவிப்பு இன்னும் வெளியிடப்படவில்லை, (உ-எ)

## அனாதரவாகக் கிடந்த ஹைஏஸ் வான்

கொழும்பு, அக் 6
கொழும்பு நகரில் நேற்று முன்தினம் பொலீஸ் அதிகாரியைச் சுட்டதாகக் கூறப்படும் தீவிரவாத சந்தேகநபர்கள் பயன்படுத்திய ஹைஏஸ் வான் ருகமவுக்கு அருகில் தெல்பே சந்தியில் அனாதரவாகக் கைவிடப்பட்டுக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது:

வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த பொலீஸ் அதிகாரி விக்கிரமசிங்கா மற்றும் இரண்டு ஊர்காவல் படையினர் இத்தாக்குதலின் போது படுகாயமடைந்தனர்.

பொலீஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்த சட்டத்தரணி விஜேதாஸ லியனாராச்சியின் மரணம் சம்பந்தமான மரணவிசாரணையை இந்தப் பொலீஸ் அதிகாரிதான் நடத்திவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## உடுவிலில் இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம். அக்.6
உடுவிலில் இளைஞர் ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் சங்குவேலியைச் சேர்ந்த சூரியர் யோகராசா (வயது 19) என்ற இளைஞனே இவ்வாறு சுடப்பட்டவராவர்.

கொலையுண்டவர் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் மரண விசாரணைக்காக யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (உ-10-90)

## பத்மநாபா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்று விசாரணைக்காகக் காத்திருப்பது தெரிந்ததே.

இந்த வழக்கு காரணமாகவே அவர் இலங்கைக்கு வருவதை முன்னர் தவிர்த்து வந்தார் எனக் கூறப்பட்டது. (உ)

## சர்வசன...-

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நடந்தது.

ஜனாதிபதி மேலும் பேசுகையில்:-

ஜனநாயகத்தைக் காப்பாற்றும் முயற்சியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை விட்டுக் கொடுக்க நான் தயார் இல்லை.

படுகொலைகள் மூலம் இந்த அரசாங்கத்தைப் பயமுறுத்த முடியாது.

ஜனநாயகத்தை பாதுகாக்கும் பெரும் பொறுப்பு எனக்கு உண்டு. நாட்டின் பாதுகாப்புக்கும் நானே பொறுப்பு.

அடுத்த ஜனவரியில் இந்த பொறுப்பு என்னை விட்டுப் போய்விடும்.

அடுத்த தேர்தலில் ஐ.தே. கவோ, சுதந்திரக் கட்சியோ, ஜே வி. பியோ வெற்றி பெறலாம். யார் வென்றாலும் அவர்களின் உயிர்கள் பாதுகாக்கப்படவேண்டும்

இப்படி திரு. ஜெயவர்த்தன தெரிவித்தார். (உ-எ)

## பிரேமா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வரவேண்டும்.

தான் பதவிக்கு வந்தவுடன் நாட்டில் சட்டம். ஒழுங்கு மீண்டும் நிலை நாட்டப்படும் என்றும் ஊழல் ஒழிக்கப்படும் என்று பிரதமர் பிரேமதாஸ இப்போது கூறி வருகிறார். இதன் அர்த்தம் என்ன?

இன்று நாட்டில் சட்டம், ஒழுங்கு இல்லை என்பதையும் நிர்வாகத்தில் ஊழல் இருக்கிறது என்பதையும் பிரேமதாஸ ஒப்புக்கொள்வது போல் இப்பேச்சு அமையவில்லையா?

- இப்படி திருமதி பண்டாரநாயக்கா கேட்டார். (உ-எ,

## பூஸா கைதிகளுக்கு நீதி கிடைக்கச் செய்க!

### இணைப்புக்குழு கோருகிறது

யாழ்ப்பாணம், அக் 6
பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க்கைதிகளுக்கு நீதி கிடைக்க வழி செய்யுங்கள்.

வடக்கு கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழுச் செயலாளர் திரு எஸ். சிவானந்தராசா விடுத்துள்ள அறிக்கை ஒன்றில இப்படிக் கோரியிருக்கிறார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி 14 மாதங்கள் கடந்து விட்டன.

ஒப்பந்தத்தில் தமிழ் பேசும் அரசியற் கைதிகள் அனைவரும் பொது மன்னிப்பின் மூலம் விடுவிக்கப்படுவர் எனக் குறிப்பிடப்பட்ட போதும்இதுவரை அவர்கள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. இது ஒப்பந்தத்திற்கு இலங்கை அரசு எவ்வளவு ஒத்துழைப்புக் கொடுக்கிறது என்ற சந்தேகத்தைஎழுப்புகிறது.

இலங்கை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு ஆளுக்கு ஆள் பாகுபாடானதா என்பது தெளிவாயில்லை. இது குறித்து தமிழ் மக்கள் பெரிதும் வேதனையடைந்துள்ளனர்.

தற்போது பூஸா இராணுவத் தடுப்பு முகாமில் 81 தடுப்புக் காவற் கைதிகளும், பூஸா தற்காலிக சிறையில் 42 தண்டிக்கப்பட்ட கைதிகளும், மகஸீன் சிறையில் 93 'விளக்க மறியற் கைதிகளும், இது தவிர நீர்கொழும்புச் சிறையில் பெண் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பொலீஸ் நிலையங்களிலும் மேலும் பல கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமது விடுதலைக்காக பூஸா சிறையில் கடந்த 30 ஆம் திகதி முதல் தம்மைத் தாமே வருத்தி சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் பேசும் அரசயற் கைதிகளின் நிலைமையையும், அவர்களது நோக்கத்தையும் தாங்கள் நன்குணர்ந்து. அவர்களது, விடுதலைக்கு நியாயபூர்வமான உதவிகளைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

-இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## இளைஞரின் சடலம் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், அக் 6
இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று அமைதிப் படையினரால் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் என்ற பெயருடைய இளைஞனின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டது. (உ-10)

## பணம் மீட்பு

யாழ்ப்பாணம் அக் 6
மந்திகை ஆஸ்பத்திரியில் இருந்து திருட்டுப் போன பணத்தின் ஒரு பகுதி கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டதாக அறியவந்துள்ளது.

கடந்த 30 ஆம் திகதி மந்திகை ஆஸ்பத்திரியில் இருந்து ஊழியர்களது சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே

இத் திருட்டுச் சம்பவத்தில் மந்திகை ஆஸ்பத்திரியின் சிற்றூழியர் ஒருவர் ஈடுபட்டதாகவும் அவர்மூலமாகவே பணம் மீட்கப்பட்டதாகவும் அறியவந்துள்ளது. (உ 10)

## நெல்சன் மண்டேலா நவம்பரில் விடுதலை?

கேப்டவுன், அக் 6
தென் ஆபிரிக்க கறுப்பு இனத் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா நவம்பர் மாத நடுப்பகுதிக்குள் எந்த நேரமும் விடுவிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கேப்டவுன் பத்திரிகை ஒன்று இத்தகவலை நேற்று வெளியிட்டது

இப்பத்திரிகை நிறவெறி அரசாங்கத்தை ஆதரிக்கும் பத்திரிகை. அரசு உயர் அதிகாரிகளை ஆதாரம் காட்டி இச்செய்தி பிரசுரிக்கப்பட்டது.

கடந்த 26 ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டுள்ள டாக்டர் மண்டேலா, கசரோகத்தினால் பீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தனியார் வைத்தியசாலை ஒன்றில் அரசினால் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (ஒ-ஈ)

## பைப்பைத் திறந்தபோது குண்டு வெடித்தது

### இந்தியப் பொலீஸ் சாட்சியம்

யாழ்ப்பாணம், அக். 6
வாளியை வைத்துவிட்டு பைப்பைத் திறந்த பொழுது குண்டு திடீரென வெடித்தது,

செவ்வாய்க்கிழமையன்று யாழ்நகரில் இடம் பெற்ற சம்பவத்தில மரணமான இந்திய றிசேர்வ் பொலீஸ் எஸ். சோகன்லாலின் மரண விசாரணையின் போது சாட்சியமளித்த மற்றொரு இந்திய பொலீஸ் அதிகாரி பிகார்லால் என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

இறந்தவரது மரணம் தொடர்பான விசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று நடைபெற்றது.

பிகார்லால் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது.

நாம் எமது முகாமில் இருந்து காலை 6-10 மணி அளவில் தண்ணீர் எடுப்பதற்காகவும், முகாம் கழுவுவதற்காகவும்குழாயடிக்கு வந்தோம். அப்பொழுது எம்மில் ஒருவர் வாளியை பைப்பின் கீழ் வைத்துவிட்டு தண்ணீரைத் திறந்தார்.

அப்போது குண்டு ஒன்று வெடித்தது.

இதனால் என்னுடன் வந்தவர்களில் மூன்று பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களை யாழ் ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். அங்கு சோகன்லால் மரணமானார் என்று அவர் தெரிவித்தார். (ஒ-10)

## உறுதிமொழியிலிருந்து மாற மாட்டோம்

### மாணவர் பிரதிநிதி உரை

வடமராட்சி, அக் 6
எந்த இடையூறு வந்தாலும் தமிழ் ஈழத் தாயகம் என்ற உறுதி மொழியிலிருந்து மாற மாட்டோம்.

இவ்வாறு நேற்று வல்வை திருவிலில் 12 போராளிகளின் நினைவுத்தூபி திறப்பு விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

எமது தாயகத்தை நாம் அடைவதற்கு அனைத்து மாணவர்களும் ஒன்று கூடி தடைகளை அகற்றி வெற்றிகாட வேண்டும். மாணவர் சமுதாயம் ஒருங்கிணைந்து ஒற்றுமைக் கரம் நீட்டினால் தான் இந்த இலக்கை நாம் அடையமுடியும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டத்தில் வல்வை பிரசைகள் குழுத்தலைவர் திரு. எஸ். செல்வேந்திரா, தென்மராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்களான திரு. எஸ். குகநாதன், திரு. எஸ். சார்ள்ஸ், வல்வை மாணவர் ஒருங்கிணைப்புக்குழுவைச் சேர்ந்த செல்வி எஸ். தேவகி மற்றும் மா. கணபதிப்பிள்ளை, செல்வி மேரி சாந்தி, செல்வி பத்மசோதி. திரு எஸ். விஜயன் ஆகியோரும் உரையாற்றினர்.

மாணவர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் திரு எஸ். தவானந்தா நன்றியுரை நிகழ்த்தினார். (உ-160)

## பல்லாயிரக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பாலசுந்தரம் சிவகாமலட்சுமியும்—

புலேந்திரனின் தூபிக்கு தந்தை குணநாயகமும் — புலேந்திரனின் மனைவி சுபாஷினியும் அவரது குழந்தையும்—

ரகுவப்பாவின் தூபிக்கு தந்தை இராஜமாணிக்கமும்—

அப்துல்லாவின் தூபிக்கு தந்தை கணபதிப்பிள்ளையும் சரஷ்தாவும்-

நளனின் தூபிக்கு தாயார் திருமதி கணபதிப்பிள்ளையும்—

பழனியின் தூபிக்கு தாயார் திருமதி பாலசுப்பிரமணியமும்—

ஹரனின் தூபிக்கு சிவபாலசிங்கமும் — (உறவினர்) மாமியார் செல்வரத்தினமும்—

மிரேஸின் தூபிக்கு பெற்றோர் து. நடராசா - மகாலட்சுமிப்பிள்ளையும்—

அன்பழகன் தூபிக்கு திருமதி தேசோமாயாநந்தம் என்பவரும் —

றெஜினோல்டின் தூபிக்கு தாயார் மேரி ஜோசப் சகோதரி குணவதியும்—

தவக்குமாரின் தூபிக்கு சகோதரன் ராசக்கிளி தங்கச்சிப்பிள்ளையும்—

ஆனந்தகுமாரின் தூபிக்கு தந்தை ஞானப்பிரகாசம் லெட்சுமியம்மா ஆகியோரும் குத்துவிளக்கேற்றி வைத்து மலர் மாலை சூட்டினர்கள்.

அதன்பின் வல்வைச் சிவன்கோயில் பிரதம குருக்கள் மனோகரசர்மாவினால் பிரதிட்சை பூசைகள் நடைபெற்றபின் கூட்டம் ஆரம்பமானது. (இ-70-160)

## இருவர்.,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பவரும் அவரது மகன் சோதிலிங்கம் (29 வயது) என்பவரும் கொலையுண்டனர்,

செல்லக்கண்டுவின் மனைவி இராசமுத்துவும் மற்றொருவரும் படுகாயமடைந்தனர். இவர்கள் இருவரும் தற்போது மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொலையுண்ட சோதிலிங்கம் மூன்று பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-70)

## தமிழ் மக்கள்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சகஜ நிலையை ஏற்படுத்துவதற்காக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள படி ஓர் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கும்-

உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

★ ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டு, இந்தியப்படையானது 1987 அக்டோபர் 10ஆம்திகதிக்கு முந்திய அமைதிப்படையின் நிலைப்பாட்டிற்கு உடனடியாகத் தன்னை மாற்ற வேண்டும்.

—இவையே அந்த நான்கு கோரிக்கைகளாகும்.

திரு. சிவானந்தசுந்தரம் வாசித்த நீண்ட தீர்மானத்தில் இந்தக் கோரிக்கைகள் பற்றி விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'இப்போது இந்திய அரசு அடிப்படை ஜனநாயகக் கோட்பாடுகளை ஒதுக்கித் தள்ளி-

எதை எமக்கு நல்லதென ஏற்பது என்றும் எதை எமக்குத் தீயதென்று நிராகரிப்பதென்றும் எமக்குள்ள சாதாரண உரிமையை எமக்கு மறுத்து-

எமக்கு அறவே ஏற்புடையதல்லாத ஒரு மாகாணசபை அமைப்புக்கான தேர்தல் ஒன்றினைத் துப்பாக்கி முனையில் எம் மீது திணிக்க முனைகிறது. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முன்வரும் வேட்பாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்க முன்வந்து தமிழ் மக்கள் மீது மேலும் துன்பங்கள் விளைவிக்க அது முனைகிறது'' -என்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (உ-160-70)

## இந்திய.,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கள் இருவரும் நல்ல முறையில் விடுதலைப் புலிகளால் கவனிக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளை மனிதாபிமான முறையில் எப்படிப் பராமரிக்க வேண்டும் என்பதற்கு இதுஓர் நல்ல எடுத்துக்காட்டு.

ஆகவே இந்திய அரசு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இப்படி வடக்கு-கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

வேலணை மேற்கு பெரியபுலம் மஹா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோயில்

**கேள்வி அறிவித்தல்**
**TENDER NOTICE**

றஸ்ஸெல்ஸ் எஞ்சினும் ஜெனரேட்டரும் (Russells Engine with Generator) விற்பனைக்குண்டு 15 - 10 - 88 வரை கேள்விகள் ஏற்கப்படும். பார்வையிட விரும்புவோர் மேற்படி கோயிலில் பார்வையிடலாம்

தலைவர்
03 - 10 - 88 பரிபாலன சபை
(7135)

**உடன் தேவை**

சமையல் செய்யக்கூடிய ஒரு பெண் 30—45 வயதுடையவராகவும் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் (Nursing School) தங்கி இருக்கக் கூடியவராயிருத்தல் வேண்டும்.

சம்பளம் நேரில் கதைத்து தீர்க்கலாம்.

அதிபர் ;
Willis F. Pierce School of Nursing
Green Memorial Hospital,
C-377 Manipay.

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து (பொன்னையா)

நாரந்தனையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து (பொன்னையா) அவர்கள் காலமாகி விட்டார். இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், யாழ்/தெல்லிப்பளை டயானி இன்டஸ்றீஸ் உரிமையாளர் திரு. ஏ. எஸ். அந்தனிபபிள்ளை, டயானி எலக்றிக்கல்ஸ் யாழ் ஸ்ரான்லி வீதி, உரிமையாளர் திரு. ஏ. எஸ், பஸ்ரியன், திரு. எ. எஸ். பற்றிக் செபேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மேசி தயாவதி அந்தனிப்பிள்ளை (வீமன்காமம் தெல்லிப்பளை), திருமதி றேஸ் பெரின்டா பஸ்ரியன் (குஞ்சு) (வீமன்காமம் தெல்லிப்பளை) திருமதி லின்டா பற்றிக் ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு. யோசவ் (நாரந்தனை) அவர்களின் அன்புச் சகோதரரும் பிரியா, சாளினி பிரிந்தா, பிரதீன, அனோஜா ஆகியோரின் பேரனும் திருமதி மரியம்மா பனுவேற்பிள்ளை (முத்துத்தம்பி)யின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 6-10-88 வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு இல. 814, ஆஸ்பத்திரி வீதி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ஏ. எஸ், அந்தோனிப்பிள்ளை
814, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் [6945]

### கந்தையா சின்னத்தம்பி (புங்குடுதீவு)

கந்தையா சின்னத்தம்பி காலமானார். இவர் யோகராசா, இரத்தினசிங்கம். அப்புத்துரை, சத்தியபாமா, கமலா ஆகியோரின் அன்புத்தந்தையும், சுப்பிரமணியம், இராமலிங்கம், பெரியபிள்ளை, சொர்ணசாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 6-10-1988 வியாழக்கிழமை 2 மணியளவில் வல்லன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

12ஆம், வட்டாரம், தகவல்:
புங்குடுதீவு. சி. சிவராசா
(6953)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Thursday 6th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org